ந.க.எண்.1843/நி1/1/2023

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
விருதுநகர்
நாள். 30 .11.2023

பொருள்: நிர்வாகம்- அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,விருதுநகர்-திரு.S.A.பாலமுருகன்,இளநிலை உதவியாளர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விருதுநகர்-பணி வரன்முறை ஆணை வரப்பெற்றது- தொடர்பாக.

பார்வை: 1)சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.36586/நிபி8/1/2023,நாள்:13.10.2023
2)சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.36586/நிபி8/1/2023,நாள்: 06.11.2023

-----------------

பார்வை-(1)இல் காணும் ஆணையின்படி,விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.S.A.பாலமுருகன் என்பவரது பணி வரன்முறை ஆணை வரப்பெற்றுள்ளது.

மேலும்,பார்வை-(2)-இல் காணும் கடிதத்துடன் தனியருக்கு பணி வரன்முறை செய்வதற்காக இவ்வலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தனியரது அசல் சான்றிதழ்கள் அனுப்பப் பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பணி வரன்முறை செய்யப்பட்ட விபரம் அவரது பணிப்பதிவேட்டில் பக்கம் எண். 10 தொகுதி 1ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணை மற்றும் அசல் சான்றிதழ்கள் தங்களுக்கு வழங்கப்படுகிறது.

முதல்வருக்காக
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
விருதுநகர்

30.11.23

30.11

பெறுநர்

திரு.S.A.பாலமுருகன், இளநிலை உதவியாளர்
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
விருதுநகர்.

நகல்

இருப்புக்கோப்பு/உதிரி

பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை-6, அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் : மரு.A. சண்முகக்கனி, எம்பிபிஎஸ்., டிசிஎச்.,

ந.க.எண்.36586/நிபி8/1/2023 நாள்: 13.10.2023

பொருள்: நிர்வாகம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திரு.ஏ.பாலமுருகன், இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விருதுநகர் (த/பெ. (லேட்) திரு.எஸ்.ஏகாம்பரம், மருத்துவமனைப் பணியாளர், அரசு மருத்துவமனை, இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

2
25/11

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) அரசு கடித எண்.8014/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் 20.05.2021.
3) இவ்வியக்க கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 59850/நிபி8/1/2021, நாள் 27.10.2021.
4) இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண். 64611/நி2/2/2021, நாள் 12.11.2021.
5) விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அலுவலக கடித ந.க.எண். 1843/நி1(1)/2023 நாள் 08.06.2023 மற்றும் 04.06.2023.
6) அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை, நாள் 08.03.2023 மற்றும் இதர தொடர்புடைய ஆணைகள்.

------

**ஆணை :**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும்போதே 18.11.2010 அன்று இயற்கையெய்திய திரு.எஸ்.ஏகாம்பரம் என்பவர் 16.06.1984 பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 15.06.1985 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 28.06.1962 அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.06.2012 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.ஏ.பாலமுருகன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்

பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)-ன்படி, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம், அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்து, பணியிலிருக்கும்போதே 18.11.2010 அன்று இயற்கையெய்திய திரு.எஸ்.ஏகாம்பரம் என்பவரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.ஏ.பாலமுருகன் (பிறந்த தேதி 24.06.1992) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500-62000/- நிலை 8 (Level-8) என்ற சம்பள முறையில் பார்வை-3இல் காணும் ஆணைப்படி பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை-4இல் காணும் பணியமர்த்தல் ஆணைப்படி, விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 22.11.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்து பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ஏ.பாலமுருகன் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை-1இல் காணும் அரசாணையின்படி அவர் பணியில் இணைந்த நாளான 22.11.2021 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

A. சண்முகக்கனி,
மருத்துவம் மற்றும் ஊரக
நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்

திரு.ஏ.பாலமுருகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விருதுநகர்.
விருதுநகர் மாவட்டம்.

-- விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மூலமாக

நகல்

1. மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை-10.
2. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, விருதுநகர்.
3. நிர்வாகப்பிரிவு - 2.
4. இருப்புக்கோப்பு / உபரி -1.

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

நிர்வாக அலுவலர்

16/10/23
18/10/23